*கவனிக்க.- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2016 ஆம் ஆண்டிற்கான பாணந்துறை நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1977 - 2016 ජූලි මස 22 වැනි සිකුරාදා - 2016.07.22**

*1977 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1160 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** டாக்டர் சமன் வீரசிங்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மே மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூலை மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கம்பளை நகர சபை

அடர்த்தியான கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான இடைக்கால கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

*1952 ஆம் ஆண்டின் 6ம் இலக்க உள்ளூராட்சி தாபனம் (நிறைவேற்றப்பட்ட இடைக்கால கட்டளைச் சட்டம்)*

*261ம் இலக்க அத்தியாயம் 1952-6ம் இலக்க உள்ளூராட்சித் தாபனம் (நிறைவேற்றப்பட்ட இடைக்கால கட்டளைச் சட்டம்) சட்டத்தின் 3ம் பிரிவில் (1) உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் 255ம் அத்தியாயமான நகரசபை கட்டளைச் சட்டத்தின் 184 (அ) உப அட்டவணையின் பிரகாரம் இதன் கீழ்காணும் தீர்மானம் அறிவிக்கப்படுகின்றது.*

செயலாளர்,
கம்பளை நகர சபை.

*2016, யூன் 30.*

### தீர்மானம்

*1989ம் ஆண்டின் 12 ஆம் இலக்க பிரதேச சபை (விஷேட அத்தியாயங்கள்) சட்டத்தின் 2ம் இலக்க பிரிவில் (1ம் இலக்க) உப அட்டவணையில் (அ) பந்தியுடன் விபரிக்கக்கூடிய 261ம் இலக்க அத்தியாயமான 1952ம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனம் (நிறைவேற்றிய இடைக்கால கட்டளைச் சட்டம்) சட்டத்தில் (2ஆவது) பிரிவில் (01) உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபை உள்ளூராட்சி பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மத்திய மாகாண உள்ளூராட்சி அமைச்சரினால் வழங்கப்பட்ட 08.06.2013 ஆந் திகதிய 18/42ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தல் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் அடர்த்தியான கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான இடைக்கால் கட்டளைச் சட்டம் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து கம்பளை நகரசபை பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு 255 ஆம் இலக்க நகரசபை கட்டளைச் சட்டத்தின் 184 (அ) உப பிரிவின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*7-802*

---

## அம்பந்தோட்டை பிரதேச சபை

அங்கீகாரம் பெற்ற துணை விதிகளை ஏற்றுக்கொள்ளல்

*(261 வது அதிகாரமாவது) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பந்தியில் (1) உப பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி அம்பந்தோட்டை பிரதேச சபையில் 2016.05.26 திகதி நடைபெற்ற சபை கூட்டத்தில் கீழே குறிப்பிட்ட பிரேரணை இல 2016-05-06-70 கீழ் பிரேரணை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

காமினி சமரகுனரத்ன,
தலைவர்,
அம்பந்தோட்டை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அம்பந்தேட்டை,
*2016, யூன் 08.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் , 261 வது அதிகாரமவது , 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கம் உடைய*

*உள்ளூராட்சி தாபனம் (அங்கீகாரம் பெற்ற துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் அளிக்கப்படுள்ள அதிகாரங்களின் படி தென் மாகாண, மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சாரால் ஆக்கப்பட்டதும் 2013.10.25 திகதி இல 1834 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமான பத்திரிகையில் iv (அ) பகுதியில் அறிவிக்கப்பட்டதும், தென் மாகாண மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டதாக 2014.10.17 திகதி இலக்கம் 1884/61 மற்றும் 2014.10.28 திகதி இலக்கம் 1886/12 உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியாசின் அதி விஷேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் தெரியப்படுதப்பட்ட போதிலும் தென் மாகாண மாகாண சபை அதிகார எல்லைக்குள் திண்ம கழிவுபொருட்கள் முகமைத்துவம் சம்பந்தமாக வரைவு துணை சட்டம் மற்றும் நுளம்புகளையும் நோய் கிருமிகளையும் இல்லாதொழித்தல் பற்றிய வரைவு துணை சட்டம் இந்த பிரேரணையை வர்த்தமான பத்திரிகையில் பிரசுக்கப்பட்ட திகதியிலிருந்து ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவதற்கு மேற் குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி தாபனம் (அங்கீகாரம்பெற்ற துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் அம்பந்தோட்டை பிரதேச சபை இதன் மூலம் தீர்மானம் செய்யப்பட்டன.*

*7-895*

---

### திக்குவெல்ல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) ஆவது பிரிவின் நியதிகளின்படி தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்ட திக்குவெல்ல பிரதேச சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதை பொதுவான உபயோகத்திற்காக திக்குவெல்ல பிரதேச சபைக்கு உரிமையாக்குவதற்கு 2016.03.28 ஆந் திகதி நடைபெற்ற தொழிற்சபையின் தீர்மான இல. 113 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டது.*

பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையாளர்களாக உரிமைகோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பைச் சாட்சிகளுடன் எழுத்துமூலமாக திக்குவெல்ல பிரதேச சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட கால எல்லைக்குள், இவ்வறிவித்தலின்படி செயல்படாவிடின், எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக் கருதி இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதன் படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை, திக்குவெல்ல பிரதேச சபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

எம். எஸ். ரத்னவீர,
செயலாளர்,
திக்குவெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்லை,
2016, யூலை 5.

**அட்டவணை**

| *தொடர் இல.* | *வீதியின் பெயர்* | *வீதியின் ஆரம்பம்* | *வீதியின் வலது புறம்* | *வீதியின் இடது புறம்* | *வீதியின் அகலம் (மீற்றர்)* | *வீதியின் முடிவு (மீற்றர்)* |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோன்கஹனே மாவத்தை | போதரகந்த சந்தியிலிருந்து மீற்றர் : 250 மாத்திரம் | i. திரு. சமன் திசா நாயக்க அவர்களின் இடம்<br>ii. திரு. டபிள்யு. எம். புஷ்ப குமார அவர்களின் இடம்<br>iii. திரு. வீ. ஜீ. விஜித் சிசிர அவர்களின் இடம்<br>iv. திரு. டபிள்யு. ஏ. இந்திக சம்பத் அவர்களின் இடம் | i. திரு. ஜயசிறி அவர்களின் இடம்<br>ii. திரு. சிந்தக சுரங்க வன்னியாரச்சி அவர்களின் இடம்<br>iii. திருமதி லக்ஷ்மி பிரசங்கிகா அவர்களின் இடம்<br>iv. திரு. பீ. பீ. ஜீ. சுபுன் அவர்களின் இடம் | 143 மீற்றர் | 3.3 மீற்றர் |

| தொடர் இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் வலது புறம் | வீதியின் இடது புறம் | வீதியின் அகலம் (மீற்றர்) | வீதியின் முடிவு (மீற்றர்) |
|---|---|---|---|---|---|---|
| 2. | கொரட்டுவ வீதி | தொரமுறே சந்தி | i. திரு. குமுது சம்பத் அவர்களின் இடம்<br>ii. திரு. பிரியந்த அவர்களின் இடம்<br>iii. மஹருப்பே இடம்<br>iv. திரு. சரத் அவர் களின் இடம்<br>v. திரு. எச். கே. சிறிசேன அவர்களின் இடம் | i. திருமதி சிந்தா பளிஹ வடன அவர்களின் இடம்<br>ii. திரு. பிரியந்த அவர்களின் இடம்<br>iii. திரு. பளிஹவடன அவர்களின் இடம் | 135 மீற்றர் | 2.8 மீற்றர் |
| 3. | திரிய மாவத்தை வீதி | நாகுலுகமுவ சந்தி | i. திரு. எச். ஆனந்த அவர்களின் இடம்<br>ii. திருமதி டபிள்யூ. டீ. பொடி நோனா அவர்களின் இடம்<br>iii. திரு. டபிள்யூ. ஜீ. சோமசிறி அவர்களின் இடம் | i. திரு. சந்திரசிறி அவர்களின் இடம்<br>ii. திருமதி என். எச். நந்தாவதி அவர்களின் இடம்<br>iii. திரு. எச். ஏ. விமலதாச அவர்களின் இடம்<br>iv. திருமதி ஏ. பி. லீலாவதி அவர்களின் இடம்<br>v. திருமதி என். எச். லக்மல் அவர்களின் இடம்<br>vi. திருமதி டபிள்யூ. டீ. பொடி நோனா அவர்களின் இடம்<br>vii. திருமதி கே. கே. கிரிஷாந்தி அவர்களின் இடம்<br>viii. திரு. ஜே. ஏ. வீரசேன அவர்களின் இடம் | 192 மீற்றர் | 2.5 மீற்றர் |
| 4. | முதலாவது குறுக்குத்தெரு | ரன்னாவல வீதி | i. திரு. எச். டீ. கருணாரத்ன அவர்களின் இடம்<br>ii. திரு. டபிள்யூ. கே. சமன் வனிகசிங்ஹ அவர்களின் இடம்<br>iii. திரு. ஜி. எம். தரிந்து மதுசங்க அவர்களின் இடம்<br>iv. திருமதி சாமாவதீ குணவர்தன அவர்களின் இடம் | i. திரு. டீ. கே. சமன் குமார அவர்களின் இடம்<br>ii. திரு. டபிள்யூ. ஏ. நிமல் அவர்களின் இடம்<br>iii. திரு. எம். ஜீ. ப்ரதீப் குமார அவர்களின் இடம்<br>iv. திரு. ஜீ. எம். பியசிறீ அவர்களின் இடம் | 156.05 மீற்றர் | 4.5 மீற்றர் |
| 5. | இத்தேகொடல்ல | தம்பகஸ்ஆர வீதி | i. திரு. எல். வை. டென்சில் அவர்களின் இடம்<br>ii. திரு. எல். வை. அஜித் ப்ரியந்த அவர்களின் இடம்<br>iii. திரு. எல். வை. அஜித் வசந்த அவர்களின் இடம் | i. திரு. எல். வை. டேவிட் சில்வா அவர்களின் இடம் | 50 மீற்றர் | 2.8 மீற்றர் |

| தொடர் இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் வலது புறம் | வீதியின் இடது புறம் | வீதியின் அகலம் (மீற்றர்) | வீதியின் முடிவு (மீற்றர்) |
|---|---|---|---|---|---|---|
| 6. | எகமுத்து மாவத்தை | பெலிகட்டுவல்ல வீதி | i. திருமதி எம். எம். மாலதீ அவர்களின் இடம்<br>ii. திருமதி ஜே. எச். ப்ரேமலதா அவர்களின் இடம் | i. திருமதி யஸவதீ அவர்களின் இடம்<br>ii. திரு. நிமல் அவர்களின் இடம்<br>iii. திரு. குணதாச அவர்களின் இடம் | 70 மீற்றர் | 2.75 மீற்றர் |
| 7. | சுதுவெல்லகே வத்த | அலுத்கொட வீதி | i. திரு. ஏ. சானக ப்ரீதீராஜ் அவர்களின் இடம்<br>ii. திருமதி எல். ஏ. பீ. மாலா அவர்களின் இடம் | i. திரு. எல். ஜீ. எச். விஜித் அவர்களின் இடம்<br>ii. திருமதி லக்ஷ்மி முத்துகுமாரண அவர்களின் இடம் | 38 மீற்றர் | 2.5 மீற்றர் |

7-892

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.